யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் ஆறு    விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 102 பிரசோற்பத்தி மாசி 25 ( 08 . 03 1992 ) ஞாயிறு



★ படைத் தலைமையகம் அறிவிப்பு

## கட்டைக்காடு மோதலில் 17 படையினரைகாணவில்லை

கட்டைக்காட்டில் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் அதிகாரி ஒருவரும், பதினேழு சிப்பாய்களும் காணாமல் போய்விட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. இவர்கள் மோதலின்போது கொலைப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. இந்த மோதலின்போது நான்கு படையினரே இறந்தனர் என முதலில் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# பெண் விடுதலை இன விடுதலைக்கு மண் விடுதலை அத்திவாரம்

## மகளிர் தினத்தையொட்டி தலைவர் பிரபாகரன் செய்தி



பெண் ஒடுக்குமுறை என்பது யுகம்யுகமாக எல்லாநாடுகளிலும், எல்லா சமூகங்களிலும் எல்லாப் பண்பாடுகளிலும் நிலவி வந்த ஒரு சமூக அநீதி இந்த சமூக அநீதி முறை இன்னும் இந்தப் பூமியிலிருந்து அகன்று விடவில்லை.

எமது தேசிய சுதந்திர இயக்கம் பெண் விடுதலையைத் தனது அடிப்படை அரசியல் குறிக்கோள்களில் ஒன்றாக வரித்துக்கொண்டு செயற்பட்டு வருகிறது,

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று அனைத்துலக பெண்கள் நாள். உலகப் பெண்ணினத்தின் உரிமைக்குரல் உலகெங்கும் முழங்கும் ஒரு எழுச்சி நாள். மனித இனத்தின சரிபாதி சனத்தொகையினர் சமநீதி கேட்டு நிற்கும் ஒரு புரட்சி நாள். இந்தப் பெண் எழுச்சி தினம் இன்று தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்,

நீண்டகாலமாக, வளர்ச்சி கண்ட நாடுகளில், தொடர்ச்சியாக நடந்துவந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக பெண்ணின் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக்கொள்ளமுடிந்தது அடிப்படையான மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் பெண்கள் வென்றெடுக்க முடிந்தது. கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனினும் இந்த நாடுகளில் பெண்ணின் பிரச்சினைகள் தீர்ந்த பாடில்லை. இங்கு பழைய பிரச்சினைகள் புதிய வடிவங்களில் தோற்றம் கண்டு வருகின்றது.

அன்றொரு காலம், மேற்குலகில், முதலாளித்துவம் எழுச்சி கொண்டு வளர்ச்சி கண்ட சகாப்தத்தில் பெண்ணினம் மிகவும் ஈவிரக்கமற்ற சுரண்டல்முறைக்கு ஆளாகியது அப்பொழுது பெண் ஒடுக்குமுறையின் மூலகாரணிமுதலாளித்துவம் எனக் கூறப்பட்டது தனியார்சொத்துடைமை நீக்கப்பட்டால் சமத்துமற்ற பொருளாதார அமைப்பு ஒழிக்கப்பட்டால் பொருளுற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டால் பெண்ணினத்திற்கு விடிவுகாலம் பிறக்கும் என வாதங்களும் முன்வைக்கப்பட்டன,

இதனால் விடுதலைவேண்டி நின்ற பெண்ணினம் சமூகப் புரட்சிப்போராட்டங்களில் அணிசேர்ந்துகொண்டது.

... 02 ஆம் பக்கம் பார்க்க

## மேலும் ஒரு சடலம் மீட்பு

கடந்த வியாழக்கிழமை கட்டைக்காட்டில் இடம் பெற்ற மோதலின்போது கொல்லப்பட்ட படையினரில் மேலும் ஒருவரின் சடலம் நேற்று புலிகளால் கண்டெடுக்கப்பட்டது.

மோதல் நடைபெற்ற தினத்தன்று பதினைந்து படையினரின் சடலங்கள் புலிகளால் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

## கொர்பசேவ் ஜேர்மன் விஜயம்

சோவியத் யூனியனின் முன்னாள் ஜனாதிபதி கொர்பச்சேவ் எட்டு நாள் விஜயம் மேற்கொண்டு ஜேர்மன் வந்துள்ளார்.

இவர் இங்கு தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்.

## துருக்கியில் குண்டு வெடிப்பு

துருக்கி தலைநகர் அங்காராவில் காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குண்டு வைக்கப்பட்டிருந்த கார் இஸ்ரேலியத் தூதரகத்தைச் சேர்ந்தது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கேசன்துறையிலிருந்து நேற்று உணவு லொறிகள் வந்தன

காங்கேசன்துறை துறைமுக களஞ்சியத்தில் இருந்து உணவு பொருள்களை ஏற்றிவர நேற்றுக்காலை நான்குலொறிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் சென்றன.

இளவாலை - சேந்தாங்குளம் [கீரிமலை வீதியூடாக எதுவித தடைகளுமின்றி இந்த லொறிகள் சென்று உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு மாலை 4. 30மணியளவில் அதே வழியாக திரும்பி வந்தன.

இந்தப்பரீ சார்த்த முயற்சி நேற்று வெற்றியளி]த்துள்ளதால் நாளை திங்கட்கிழமையிலிருந்து பதிவுசெய்யப்பட்ட பத்து லொறிகள் கொண்ட வாகன அணித்தொடர் காங்கேசன் துறையில் இருந்து பொருள்களை ஏற்றிவரவுள்ளன 07

## உலக கிண்ண கிரிக்கெட்

## இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் வெற்றிபெற்றன

நியூசிலாந்தில் கமல்டனில் நேற்று இடம்பெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா அணி சிம்பாப்வே அணியை 54 ஓட்டங்களால் வென்றதன் மூலம் இந்தியாவின் புள்ளிகள் 5ஆக உயர்ந்துள்ளன.

மழை காரணமாக 32 ஓவர்களாக குறைக்கப்பட்ட இப்போட்டியில் முதல் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 32 ஓவர்களில் 7 விக்கற் இழப்பிற்கு 203 ஓட்டங்களைக் குவித்தது

சிம்பாப்வே அணி 191 ஓவர்களில் ஒரு விக்கற் இழப்பிற்கு 104 ஓட்டங்களை பெற்று ஆடிக்கொண்டிருக்கை

—04 ஆம் பக்கம் பார்க்க

## கட்டைக்காட்டில் நேற்றும் கைப்பற்றப்பட்டவை

கட்டைக்காட்டில் நேற்றும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்;

★ ரீ 81 மகஸீன் - 05
★ ரீ 56 மகஸீன் - 05
★ ஏ. கே ரவை - 175
★ ஜே. ஆர் கைக்குண்டு - 03
★ ஆர். பி. ஜி புறொவ்ளர் - 01
★ ஹெல்மட் - 07
★ சப்பாத்து ஒரு சோடி
★ ஏ. கே கோல்சர் - 01

## வங்கிகளின் நிலைமைகளால் ஐ.தே.கவில் கருத்து வேறுபாடு

இலங்கை வங்கி, மக்கள் வங்கி நிலைமையால் ஐக்கிய தேசிய கட்சியில் உயர்மட்டத்தில் கருத்து வேறுபாடு நிலவுவதாகவும் பிரேமதாஸ ஆசனம் ஸ்தரமற்ற நிலையில் இருப்பதாகவும் பி பி ஸி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது

இலங்கை வங்கி, மக்கள் வங்கி விடயங்களில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உலகவங்கியின் சொற்படி அரசு நடப்பதால் எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராக பிரசாரம் செய்துதமக்கு ஆதரவு தேடுவதாகவும் பி பி ஸி தெரிவிக்கிறது

வங்கிகள் நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது

## கிளிநொச்சியில் நேற்று தமிழீழ மகளிர் மாநாடு

தமிழீழ மகளிர் மாநாடு நேற்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியால் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

மாவீரர்களுக்கு முதலில் அஞ்சலி செலுத்தி விழா ஆரம்பமானது தமிழீழ தேசியக்கொடியும் ஏற்றப்பட்டது,

07.17

## இன்று நடைபெறவுள்ள மகளிர் தின நிகழ்ச்சிகள்

இன்று நடைபெறவுள்ள மகளிர் தின வைபவங்கள் வருமாறு

வலிகாமம்—இராமநாதன் கல்லூரியில் இரவு 7 மணி

தீவகப்பிரிவு—நாவற்குழி சின்ன அருள் சனசமூக நிலையம் அருகில் இரவு 7 மணி

தென்மராட்சி—சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானம் இரவு 7

கடற்புலிகள்பிரிவு—பரவையூர் சென் அந்தனிஸ் விளையாட்டு மைதானம் மாலை 6 மணி

வடமராட்சி — பருத்தித்துறை பழைய பஸ் நிலையம் இரவு 7 மணி

சகலரும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்,

## இன்று செங்குந்தாவில்

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ள மகளிர் தின நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (41)

# சிறிய செய்திகள்

## மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் நாவலர் இந்து தமிழ்க்கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் புதன் கிழமை வித்தியாலய அதிபர் சி.வி.குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவின் பிரதம விருந்தினராக மருதனாமடம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சிவானந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (23)

## சிகை அலங்கரிப்பாளர் நன்கொடை

நோயாளரின் நலன் கருதி வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் சமாஜம் நான்காயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரமொன்றை யாழ் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

## ஊழியர்க்கு கருத்தரங்கு

வட பிராந்திய வர்த்தக ஊழியர்களுக்கு நிர்வாகம், முகாமைத்துவம், தொழிற் பயிற்சிகள் அளிக்கும் முகமாக மாதாந்தக் கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது. (14)

## சீமெந்து தொழிலாளர் சங்கம்

யாழ் மாவட்ட சீமெந்துக் கட்டடத் தொழிலாளர் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (14)

## வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக் கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இவ்வார அமர்வில் திரு. டானியல் அன்ரனி அவர்கள் 'எனது கலை இலக்கிய அனுபவங்கள்' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

## கணித உபகரணம் தயாரித்தல் போட்டி

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கிடையே "கணிதம் கற்பித்தல் உபகரணம் தயாரித்தல்" என்னும் விடயத்தில் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான முடிவுத் திகதி இம் மாதம் 31 ஆம் திகதியாகும்.

இப் போட்டியில் கலந்து கொள்வோர் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையுள்ள வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்தலுக்குப் பொருத்தமான உபகரணம் அமைத்தல் வேண்டும். (18)

## மெய்வல்லுநர் போட்டி

மல்லாகம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மல்லாகம் கொ.த.த. அதிபர் திரு. ஆ. கமலநாதன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். மகேசவேலு அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

## நிர்மாணத் திட்டங்கள்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தேசநிர்மாணிகள் பிரிவு இவ்வருடத்தில் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் பல நிர்மாணத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

யாழ் குடாநாட்டில் சிறு குளங்களைப் புனரமைத்தல், வாய்க்கால்கள், உவர் நீர்த் தடுப்பு அணைகளைப் பராமரித்தல், கட்டடத் தேவைக்கான சுண்ணாம்பு உற்பத்தியை விரிவுபடுத்தல், வன்னி மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்தல், வன்னிப் பிராந்தியத்தில் செங்கட்டி உற்பத்தி செய்தலும், ஊக்குவித்தலும் பறங்கியாறை திசை திருப்புவது தொடர்பான நில அளவு வேலைகளை மேற்கொள்வது போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
16 - 10 - 1930
ஆண்டவன் அடியில்:
03 - 03 - 1987
திதி
08 - 03 - 1992

### திருமதி சரஸ்வதி பரமலிங்கம்

ஆழமான கடலைவிட
மேலான அன்புகொண்ட — தாயே
ஆண்டவன் இடம் சென்று ஐந்தாண்டானாலும்
உங்களின் திருவுருவம் இன்றும்
எம்முன்னே அழியாது தோன்றுதம்மா
உங்கள் ஆத்மீக சக்தியினால்
எம்மையெல்லாம் காத்திடுவாய்

சரஸ்வதி வாசா
V. M. வீதி,
பருத்தித்துறை.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

03007


# பெண்ணடிமைக்கு முற்றுப்புள்ளி வைக்க

# சர்வதேச மகளிர் தினம் வாய்ப்பாகிறது

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

பெண் விடுதலையானது ஒரு நிலையில் எமது சமுதாயத்தில் காணப்படும் அமைப்பையே மாற்றி அமைக்கும். சமூகத்திலுள்ள ஆண்-பெண் உறவு, கணவன் - மனைவி உறவு குடும்பத்தில் காணப்படும் தன்மை, சொத்துரிமை பற்றிய கொள்கை என்பவற்றில் மாறுதல்கள் ஏற்படும். பெண்ணடிமை இல்லாத சமூக அமைப்பில் பெண் என்பவள் ஆணுக்கு நிகராக இருக்க வேண்டும் என்பதைவிட மீண்டும் ஒருமுறை பெண்ணடிமை என்ற நிலை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவசியமானதாகும் இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணடிமை என்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க சர்வதேச மகளிர் தினத்தை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் ஆண்களைப் பொறுத்தவரை பெண்ணடிமை பற்றிய ஆய்வுகள் 'ஐயோ பாவம்' என்னும் வகையில் அமைந்திருக்கிறதே தவிர இதிலிருந்து விடுவிக்கும் வகையில் அமையவில்லை சர்வதேச மகளிர் தினத்தின் புனிதத்தன்மையை புரிந்து கொண்டு ஆண்களும் பெண்ணடிமை ஒழிப்பிற்கு தக்க பங்கினை வழங்குவார்களேயானால் பெண்ணடிமை என்பது 'விரைவில் ஒழிந்து விடும்' என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும் பல பெண்களுக்கு பெண்ணடிமை என்றால் என்ன? எங்கே அடைக்கப்படுகிறார்கள்? அதனால்ஏற்படும்விளைவுகள் என்ன? என்ன என்று கூடத் தெரியாத நிலையில்வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் இதனால் பெண்ணடிமை முறை என்பது தொடர்ந்து செல்வதற்கு வாய்ப்புண்டு எனவே, இவற்றை விரைவில் ஒழித்துக் கட்டுவதற்கு சர்வதேச மகளிர் தினத்தை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பமும் ஆசையும்.

பெண்கள் தமது அடிமை விலங்கு அறுத்தெறியப்பட வேண்டும் விடிவு வேண்டும் என இன்னமும் அங்கலாய்த்துக் கொண்டிருப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை இக்கட்டுக்கோப்புக்களை உடைத்தெறிய அவர்கள் முனைதல் வேண்டும் தமிழீழப் போராட்டத்தில் தமிழீழப் பெண்கள் போராடி வருகிறார்கள். இது பெண்களின் விழிப்புணர்வின் வேகத்தை காட்டுகின்றது. பெண் விடுதலைக்காகவும், தேசவிடுதலைக்காகவும் தமிழீழப் பெண்கள் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொள்வது சர்வதேச மகளிர் தினத்துக்கு மேலும் வலுவூட்டும் என்பதில் சந்தேகமில்லை. எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பெண்

பெண்களின் பங்களிப்புடன் பல நாடுகளில் சமூகப் புரட்சிகள் நிகழ்ந்தன. சமூதாய மாற்றமும் பொருளாதார சமத்துவத்தைக் கட்டி எழுப்பிய நாடுகளில் பெண்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தது சமூக அந்தஸ்து மேம்பட்டது ஆயினும் இந்நாடுகளில் பெண் ஒடுக்குமுறை முற்றாக நீங்கிய பாடில்லை. சமதர்ம சமூக உலகத்திலும் பெண்ணுக்குச் சமநீதி கிடைத்ததாகக் கூறிவிட முடியாது.

இந்த சமூகப் பரிசோதனை அனுபவங்களிலிருந்து நாம் ஒரு உண்மையைக் கண்டு கொள்ளலாம் அதாவது பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும் ஆண்களின் மனோவுலகில் பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை.

பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில் அவர்களது சமூக பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும் அதே வேளை ஆண் - பெண் உறவிலும் அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை உண்மையான சமத்துவம் என்பது ஆண் - பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில் தான் சாத்தியமாகிறது.

எமது சமூகக் கட்டமைப்பில் பெண்ணினம் மிகவும் மோசமான ஒடுக்குமுறை வடிவங்களை எதிர்கொண்டு நிற்கிறது மிகவும் பின்தங்கிய சமூக, பொருளாதார வாழ்வு ஒரு புறமும் அரச அடக்குமுறை அழுத்தங்கள் மறுபுறமும் ஆணாதிக்க கொடுமைகள் இன்னொரு புறமுமாக பல பரிமாணங்களில் எமது பெண்கள் ஒடுக்குமுறையைச் சந்திக்கின்றார்கள். இங்கு பெண் விடுதலை என்பது ஒரே காலத்தில் பல வேறு முனைகளில் தொடுக்கப்பட வேண்டிய ஒரு போராட்டமாக அமைந்துவிட்டது.

பெண் விடுதலை எனும் பொழுது அரச அடக்குமுறையிலிருந்து சமூக ஒடுக்குமுறையிலிருந்தும், பொருளாதார சுரண்டல் முறையிலிருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம் எனவே எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலைப் போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என்ற குறிக்கோள்களைக் கொண்ட மும்முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த மும்முனைப் போராட்டங்களில் தேசிய விடுதலை அதாவது எமதுமண்ணின்விடுதலைமுக்கியமானது எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின்தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. எமது மண்ணின் விடுதலை பெண்ணின் விடுதலைக்கு மட்டுமன்றி எமது இனத்தின் விடுதலைக்கும் அத்திவாரமானது.

இந்த மண் மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களைச் செய்துவருகிறார்கள். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும் வளர்ச்சியும் எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கிறது.

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றி பெற முடியும். வீரமும், தியாகமும், துணிவும், தன்னம்பிக்கையும் கொண்ட புரட்சிப் பெண்களாக மாற முடியும் பெண் விடுதலைக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணி சேரும் பொழுதுதான் எமது போராட்டமும் முழுமை பெறும்

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்தும் பெண்ணினம் விடுதலைவேண்டி நிற்கிறது. நீண்ட, நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூட நம்பிக்கைகளும், இந்த மூட நம்பிக்கைகளிலிருந்து தோற்றம்கொண்ட சமூக வழக்குகளும் சம்பிரதாயங்களும் எமது பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்துவருகிறது. ஆணாதிக்க அடக்குமுறையாலும், வன்முறையாலும், சாதியம் சீதனம் என்ற கொடுமைகளாலும் தமிழீழப் பெண்ணினம் விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறது.

இந்த ஒடுக்குமுறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதனால் பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக ஏவப்படுவரும் ஒடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதனால் பெண்ணினம் தனது இழி நிலை பற்றி விழிப்புக் கொள்ளவேண்டும். தலைவிதி என்றும், கர்ம வினை என்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும் பழமை என்றும் பண்பாட்டுக் கோலம் என்றும் காலம் காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம் விழித்தெழவேண்டும். விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி. விழிப்படைந்து எழுச்சிகொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்ட சக்தியாக உருப்பெறமுடியும் அந்தப் போராட்ட சக்தியால் தான் ஒடுக்குமுறை விலங்குகளை உடைத்தெறிய முடியும்

ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும் இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மனவுலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்

மனித உறவுகளில் அடிப்படையானது ஆண்-பெண் உறவு இந்த உறவு சாதாரண சமூக உறவு அல்ல இது மனித உயிர் இயக்கத்திற்கும் மனித இன விருத்திக்கும் மூலமானது மனித இனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது

ஆண்-பெண் உறவில் எழும் அப்சுரங்களாகவே இன்று பெண்ணினம் எதிர்கொள்ளும் பல அவலங்கள் தோற்றம் கொள்கின்றன.

ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும் சமத்துவத்

—06ஆம் பக்கம் பார்க்க


## சிறுவிளம்பரம்

### ஜோதிடம்

சனி, செவ்வாய் பங்குனியில் சூரியனையும், வியாழனையும் நோக்குவதால் உலகில் வெப்பம் நெருப்பால் அழிவுகளை உண்டாக்கும் உள்நாட்டிலும் பரவலானதாக்குதல்களுக்கும் ஏதுவாகும். புத்தாண்டில் மீண்டும் அமைதி.
PROF சத்தியதாஸன்
சோதிடர், யாழ்ப்பாணம்.
03022

★ கொழும்பு பேராயர் பேரருட் திரு. மாக்கஸ் பெர்னாண்டோ கருத்து

# இலங்கையில் அதிக சக்திவாய்ந்த குரலொலியுள்ள

# தமிழ்க்கட்சி விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே!

இலங்கையில் அதிக சக்தி வாய்ந்த, குரலொலியுள்ள தமிழ்க் கட்சி விடுதலைப்புலிகள் இயக்கமே எனக் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டப் பேராயர் பேரருட் திரு. நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகத் தனது கருத்துக்களைப் பேராயர் அண்மையில் தெரிவித்தார். அப்போதே விடுதலைப் புலிகளே அதிக சக்தி வாய்ந்த தமிழ்க் கட்சி என்பதை ஆண்டகை பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு வேறு நாடுகள் வேண்டும் என்றும் மாகாணசபை ஆட்சி அல்லது கூட்டுமாகாண சபை சிறந்தது என்றும் கூறப்படுகிறது எனக் குறிப்பிட்ட பேராயர் மாகாணசபை முறைமையைப் பரீட்சித்துப் பார்த்தால் என்ன எனவும் கேட்டுள்ளார். இந்த மாகாண சபை அப்பகுதி மக்கள் தம்மைத்தாமே ஆட்சி செய்யக் கூடியதான சுதந்திரத்தை அவர்களுக்கு வழங்கும் மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டத்தில் சகல கட்சிகளும் வெளிப்படுத்திய அபிப்பிராயங்களையும், மாறுபட்ட தத்தமது கொள்கைகளுக்காகப் போரிடுவோரின் உயிர் இழப்புக்களையும் சாதாரண குடிமக்களின் துன்பங்களையும், அழிவுகளையும் கருத்திற் கொள்ளும் போது, நாட்டுப் பிரிவினை, தற்போதிருக்கும் மையப்படுத்தப்பட்ட ஆட்சி ஆகிய இக்கருத்துக்களையும் நாம் கைவிடவேண்டி இருக்கிறது. மீதியாக இருப்பது மாகாண சபை முறைதான் எனவும் பேராயர் பேரருட்திரு. நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார். (16)

## கொழும்பில் அதிகளவில் கதிர்வீச்சு!
### சட்டவிரோத எக்ஸ்ரே கிளினிக்குகள் காரணமாம்

இலங்கையின் நகர்ப்புறச்சூழலில் அதிகளவான கதிர்வீச்சு காணப்படுவது தற்பொழுது அவதானிக்கப்பட்டுவருவதாக கொழும்பு அணுசக்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. நகர்ப்பகுதியில் அனுமதி பெறாத எக்ஸ்ரே கிளினிக்குகள் பல இயங்கிவருகின்றமையே இந்த நிலை ஏற்படக்காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக தலைநகர் கொழும்பில் அதிகளவில் இத்தகைய கதிர் வீச்சு காணப்படுவதாகவும் ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது. இவ்வாறான அனுமதி பெறாத எக்ஸ்ரே கிளினிக்குகளை தொடர்ந்தும் இயங்க அனுமதித்தால் அதனால் நகர்ப்பகுதிகளில் பாரதூரமான விளைவுகளை எதிர் நோக்க வேண்டிவருமென அணுசக்தி அதிகாரசபை எச்சரித்துள்ளது.

## துணைப்பாட விதான விருத்திக்கு மாணவர் ஒன்றியம் முயற்சி

யாழ். மாவட்டத்தில் முதற்தடவையாக தென்மராட்சி கல்விக்கோட்டத்தில் உயர்தர மாணவர் ஒன்றியமொன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ் ஒன்றியத்தில் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வியிலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் அங்கம் வகிப்பர்.

கருத்தரங்குகள், செயலமர்வுகள் மூலம் மாணவர்களின் கல்விமேம் பாட்டிற்கும் துணைப்பாடத்தின்முவிதான வளர்ச்சிக்கும் இவ் ஒன்றியம் உதவும் என ஒன்றியப் பொறுப்பாசிரியர் நகுலராஜா தெரிவித்தார்.

## இந்திய கடத்தல் படகு
### தென்பகுதிக் கடலில் சிக்கியது

இந்தியாவிலிருந்து 26 இலட்சம் ரூபா பெறுமதியான புடவைகளை ஏற்றி வந்த கடத்தல் படகு ஒன்று தென்பகுதிக் கடலில் வைத்து சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இப் படகில் இருந்த அறுவர் கைது செய்யப்பட்டு பின்னர் அவர்களுக்கு தலா ஆறரை இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## உடற்பயிற்சி கட்டாயமாகும்

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உடற்பயிற்சி கட்டாய மாக்கப்பட்டுள்ளதாகயாழ் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

ஒவ்வோர் பாடசாலையிலும் பாடங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வித்தல் வேண்டுமென்று அதிபர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 04

## அரச ஊழியர்க்கு 12 வார பிரசவ லீவு கிடைக்கும்

அரசாங்க சேவையிலுள்ள பெண் ஊழியர்கள் கர்ப்பிணியானால் அவர்களுக்கு 111 நாள்கள் (12 வாரங்கள்) பிரசவ லீவாக வழங்கப்படவுள்ளது.

விடுமுறை காலத்தில் சனி, ஞாயிறு, போயா மற்றும் அரசாங்க விடுமுறைகள் கழிக்கப்பட்டு வேலை செய்யும் நாள்களைக் கொண்ட இவ் விடுமுறை வழங்கப்படும்.

மேற்கண்டவாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

## யாழ். வர இருபிக்குகள் விருப்பம்; அனுமதி வழங்க அரசு மறுப்பு

மெதடிஸ்த சபையின் முன்னாள் தலைவர் அருட்திரு சோமா பெரேரா தலைமையிலான தென்பகுதி மதகுருமார் குழு இம்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்குழுவில் கத்தோலிக்க திருச்சபையின் யேசு சபைக் குருவான அருட்திரு போல் கஸ்பஸும் யாழ்ப்பாணம் வருகிறார் இவர் தற்பொழுது கண்டியில் தோட்டத்தொழிலாளர்களின் நலனில் அதிக அக்கறை காட்டிவருகின்றார்.

இக்குழுவுடன்யாழ் வர இரு பௌத்த பிக்குகளும் விருப்பம் தெரிவித்துள்ள போதிலும் அதற்கான அனுமதியை அரசு வழங்கவில்லை எனவும் தெரியவருகிறது.

## தெற்கில் தீக்கிரையாக்கப்பட்ட செயலகக்கட்டிடங்கள் புனரமைப்பு

தென்பகுதியில் கடந்த காலங்களில் ஜே.வி.பி நடவடிக்கைகளின் போது தீக்கிரையாக்கப்பட்ட அரசாங்கக் கட்டிடங்கள் 150 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிதியைக் கொண்டு ஏற்கனவே தென்பகுதியில் 68 அரச அலுவலகக் கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

ஊவா மாகாணத்தில் சகல பிரதேசச் செயலகங்களும் 32 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

## வீரமங்கையாய் விடுதலைக்கு பெண்ணே ஆயுதமேந்து!

☐ தாலிக் கொடிகட்டித் தாரமெனப்
போலிப் பெயர்பொறித்து .. சிலநாளில்
வேலிப் படலையே தாண்ட வேண்டாமென
காலிற் கட்டொன்று போட்டு...
வேலின் விழியாள் உனைவருத்தி...
சிறை வைக்குமிடமே... 'அடுப்படி'!

☐ துடுப்புகள் அற்ற தோணிபோல் ஓர்வீட்டின்
உடுக்கென அடிபட்டு .. வதைபட்டு - நீ
சீர்கெட்டு... இயந்திரம்போற் சிதைபெற்று...
பேர்கெட்டு... உருவற்றி... அழிவுற்று...
தறிகெட்டு... நிலைகெட்டு வாழ்வதிலும் -
பெண்ணே
வீரமங்கையாய் விடுதலைக்கு... ஆயுதமேந்து!

— கவிஞர் வாஞ்சிநாதன்

## அமெரிக்க சுதந்திர தேவதை திருமதி கொலம்பஸ் ஆகிறார்

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்து இவ் வருடத்துடன் 500 ஆண்டுகள் பூர்த்தி பெறுகிறது.

இதனைக் கொண்டாடுமுகமாக அமெரிக்கர்கள் 'கொலம்பியா' என்ற விழாவை அண்மையில் அங்கு கொண்டாடினார்கள். இவ்விழா கோலாகலமாக ஒரு வாரமாகக் கொண்டாடப்பட்டபொழுது 'ஸ்டாச்சு ஒவ் லிபர்டி' என்ற அமெரிக்க சுதந்திரத் தேவதை சிலைக்கும், கிறிஸ்தபர் கொலம்பஸ் சிலைக்கும் திருமணஞ் செய்துவைத்து அவர்கள் மகிழ்ந்தனர்.

100 வருட காலமாக 'செல்வி லிபர்ட்டியாக' இருந்த அமெரிக்க சுதந்திர தேவதை, இப்பொழுது 'திருமதி லிபர்டி கொலம்பஸ்' ஆகிவிட்டார் என்று அமெரிக்கர்கள் கூறி மகிழ்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (16)

## சட்டவிரோதமாக மரம் தறிப்போரை சுட்டுக் கொல்ல உத்தரவு!

சட்டவிரோதமாக மரம் தறிப்பவர்களை சுட்டுக் கொல்லுமாறு பொலிஸாருக்கும் படையினருக்கும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறிப்பாக நீரேந்து பகுதிகளில் சட்டவிரோதமாக மரம் தறிப்பவர்களை கண்ட இடத்திலேயே சுட்டுக் கொல்லுமாறு படையினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதிகளவில் மரம் தறிப்பதனால் ஏற்படும் பெரும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

## மிக ஆபத்தான மைக்கல் ஆஞ்சலோ வைரசினால்

# 10 ஆயிரம் கம்பியூட்டர்கள் நேற்று முன்தினம் செயலிழப்பு!

'மைக்கல் ஆஞ்சலோ' எனப்படும் மிக ஆபத்தான கம்பியூட்டர் வைரசினால் நேற்றுமுன்தினம் உலகம்முழுவதும் ஆயிரக்கணக்கான சொந்த உபயோகத்துக்கான கம்பியூட்டர்கள் வேலை செய்ய மறுத்துவிட்டன.

பொதுமக்கள் இந்த வைரஸ் பற்றி ஏற்கனவே எச்சரிக்கப்பட்டதனால் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய நாடுகளில் இந்த வைரஸைக் கட்டுப்படுத்த முடிந்ததென அமெரிக்க நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எனினும் இந்த வைரஸினால் நேற்றுமுன்தினம் மட்டும் குறைந்தது 10 ஆயிரம் கம்பியூட்டர்கள் பாதிக்கப்பட்டு விட்டன.

அரச மற்றும் இராணுவக் கம்பியூட்டர்களுக்கு சேதமெதுவும் ஏற்படவில்லை என அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கலாசார இயக்கத்தின் பிரதிநிதியான மைக்கல் ஆஞ்சலோவின் 517 ஆவது பிறந்த தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் இந்த 'கம்பியூட்டர் வைரஸ்' வெளிப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் கருச்சிதைவு அதிகரித்து வருகிறது

ஆசிய நாடுகளில் கருச்சிதைவு அதிகம் காணப்படும் நாடுகளில் இலங்கையும் முகிய இடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கையில் கருச்சிதைவு 13 சதவீதமாகவும் பங்களாதேஷில் 16வீதமாகவும்காணப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

# ராஜ்ய சபாவிற்கு விரைவில் 18 புதிய உறுப்பினர்கள்

இந்திய ராஜ்ய சபாவிலுள்ள 18 இடங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு விரைவில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ராஜ்யசபாவிலுள்ள இந்தய் 18 உறுப்பினர்களினதும் 6வருடபதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதியுடன் முடிவடைவதை யடுத்தே அவர்களது இடங்களுக்கு புதியவர்கள் தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்படவுள்ளனர்.

ஆந்திர பிரதேஷ், கர்நாடகம், கேரளம், அஸாம், இமாப்சல் பிரதேஷ்நாகர் லந்த், திரிபுரா ஆகிய மாநிலங்களிலேயே இத் தெரிவு இடம் பெறும்.

# "பௌத்த - இந்து மகாசபை" தெற்கில் புதிதாக அமைப்பு

தெற்கில் 'பௌத்த - இந்து மகாசபை' என்ற அமைப்பு ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதாக செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இதன் இணைத் தலைவர்களாக யோகொட பிரேமரத்னா, யோகேந்திரா துரைச்சாமி ஆகியோர் தெரிவாகியுள்ளதாகவும் அச் செய்தி தெரிவிக்கிறது.

# தர்ம ஸ்தாபனங்களுக்கு தொடர்ந்தும் வரிவிலக்கு

அங்கீகரிக்கப்பட்ட தர்மஸ்தாபனங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு தொடர்ந்தும் வரி விலக்கு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த புதன்கிழமை அமைச்சரவை இந்த முடிவை எடுத்தது.

# மீனவருக்கான கட்டுமரங்கள் உள்ளூரிலேயே தயாராகும்

தமிழீழத்தில் கடற்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அ துரைராசா தலைமையில் நடைபெற்றது தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யபட்ட இக்கருத்தரங்கில் கடற்தொழிற் துறையை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான கருத்துகள் பரிமாறப்பட்டன

இக்கருத்தரங்கில். இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தொழில் வாய்ப்புக்களை இழந்த கடற்தொழிலாளர்களை நாச்சிக்குடாப்பகுதியில் குடியமர்த்தி அவர்களை மீண்டும் தொழிலில் ஈடுபடச்செய்ய முயற்சிப்பதெனவும் தற்போதைய நிலையில் கரையோரமீன் பிடிப்பே சாத்தியம் படுவதனால் அதை ஊக்குவிப்பதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற் தொழிலாளர்களுக்கு வேண்டியகட்டுமரங்களை உள்ளூரிலேயே தயாரிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இதுவரை காலமும் கட்டுமரங்கள் தயாரிப்பதற்காக அல்வீசியா- மலைவேம்பு போன்ற மரங்கள் கண்டிப்பகுதியில் இருந்தே பெறப்பட்டு வந்தன. இன்றைய சூழ்நிலையில் இது சாத்தியப்படாததால் கிளிநொச்சிப்பகுதியில் இருந்து இலவம்பஞ் சுமரங்களைப் பெற்று கட்டுமரங்களைத் தயாரிப்பதற்கும், கட்டுமரம் தயாரித்தல் மூலம் பெற்றுக்கொள்ளப்படும்வருமானத்தை வனபரிபாலனத்திற்குப்பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாச்சிக்குடாப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்களை உடனடியாகசந்தைப்படுத்துவதை போக்குவரத்து பிரச்சினைகள் காணப்படுவதால் மீன்களை பதப்படுத்தி விநியோகம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

### இந்திய...

யில் மீண்டும் மழை பெய்தமையால் ஆட்டம் நிறுத்தப்பட்டு உலகக் கிண்ணப் போட்டிகள் விதிகளுக்கு அமைய 19 ஓவர்களில் இரு அணிகளும் பெற்றிருந்த ஓட்டங்களின்படி இந்தியா 158 ஓட்டங்களை பெற்றிருந்தமையால் இந்தியா 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றதென அறிவிக்கப்பட்டது:

அவுஸ்திரேலியாவில் அடிலேட்டில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணியை அவுஸதிரேலியா தோற்கடித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கற்றுகள் இழப்பிற்கு அரவிந்தடி சில்வா பெற்ற 63 ஓட்டங்கள் உட்பட 189 ஓட்டங்களை பெற்றது,

அவுஸதிரேலியா வெற்றி இலக்கான 190 ஓட்டங்களை 44 ஓவர்களில் 3 விக்கற்றுகளை மாத்திரம் பறிகொடுத்து பேற்றது.

★ கிளிநொச்சி பகுதி விவசாயிகள்

# உற்பத்தியான தானியங்களை சந்தைப்படுத்த முடியாத நிலை

கிளிநொச்சியில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கௌபி, உழுந்து, பயறு ஆகிய தானியங்களுக்கு போதிய சந்தை வசதி இல்லாமையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த தானியங்களை கொழும்பில் இருந்து தருவிப்பதில் கிளிநொச்சி பகுதி வர்த்தகர்கள் கூடுதலானவர்கள் அதிக கவனம் செலுத்துவதால் உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட இந்த உபதானியங்கள் தேடுவாரற்றுத் தேங்கிக்கிடக்கின்றன,

மிகக் கஷ்டமான காலகட்டத்திலும் உள்ளூர் விவசாயிகள் இந்த உபதானியங்களை உற்பத்தி செய்த போதிலும் அவற்றிற்கு வேண்டிய சந்தை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

நெல் அறுவடை ஆரம்பித்திருக்கும் இக்கால கட்டத்தில் அவற்றின் கொள்வனவும் மிகக்குறைவாக இருப்பதாக விவசாயிகள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள் 17

# தேவரையாளிக் கல்லூரி வடமராட்சி சாம்பியன்

பாடசாலைகளுக்கு இடையிலான உதை பந்தாட்ட போட்டித் தொடரில் 15 வயதிற்கு உட்பட்டவர்கள் அணியில் தேவரையாளி இந்துக் கல்லூரி வடமராட்சி கோட்டத்தின் சாம்பியன் ஆனது.

தேவரையாளி அணி கலந்து கொண்ட போட்டிகள் யாவற்றிலும் வெற்றி பெற்றுள்ளமை குறிபபிடத்தக்கது

நெல்லியடி மத்திய வித்தியாலயத்தை 2.0 கோல்களினாலும், ஹாட்லிக் கல்லூரியை 3:1 என்ற கோல்கள் அடிப்படையிலும் தோற்கடித்தது

மேலும் இறுதியாட்டத்திலும் அதனை எதிர்த்து மோதிய பலம் பொருந்திய விக்கினேஸ்வரா கல்லூரி அணியை 2:0 கோல்களால் தோற்கடித்தது. 16

# ஏப்ரல் மாதம் முதல் இரு நேர வகுப்புக்கள்

ஏப்ரல் மாதத்தில் இருந்து யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தில் இயங்கும் சகல பாடசாலைகளும் இரு நேரப் பாடசாலைகளாக இயங்க வேண்டும் எனக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

வாரத்தில் திங்கள், புதன் வெள்ளியாகிய மூன்று நாள்களிலும் இவ்வாறு இயங்க முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தொடர்ந்து முழுநாளும் அவ்வாறு இயங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுமெனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ் இந்துக் கல்லூரியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியை ஆரம்பித்து தலைமை தாங்கி உரை நிகழ்த்தியபோதே பணிப்பாளர் மேற்படி பணிப்புரையை விடுத்தார். 20

# பளை அபிவிருத்திச்சபைக்கு கிளிநொச்சியில் கிளை

பளை அபிவிருத்தி சபை தனது கிளை ஒன்றை கிளிநொச்சி மாவட்டத்தில் அமைப்பதற்காக தேவையான 50 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கித் தருமாறு கிளிநொச்சி மாவட்ட காணிக் கிளையைக் கேட்டிருப்பதாக அறியவருகின்றது.

கிளிநொச்சியில் மேற்படி கிளை ஒன்று அமையுமிடத்து பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கமுடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

இத்திட்டம் 7 ஆண்டு காலத்தில் பூர்த்தியாகும் எனவும் ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா வரை செலவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது, 17

# வில்லிலில்லி இன்று வருகிறது?

நேற்று வருமென எதிர்பார்க்கப்பட்ட வில்லில்லிக் கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைய உள்ளது.

இக்கப்பலில் உணவுப் பொருள்கள், தபாற் பொதிகள், மருந்து வகைகள், உணவு முத்திரைகள் ஆகியன எடுத்துவரப்படவுள்ளன

இதே நேரம் காங்கேசன் துறை துறைமுகத்துக்கும் கப்பல்கள் வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 07

# சந்திரசேகரனை விடுவிக்க தொழிற்சங்கம் வேண்டுகோள்

தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரனை நீதிமன்றத்தில் ஆஜராக்க வேண்டும், என்று தோட்டத் தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சந்திர சேகரனை விசாரணை செய்து குற்றமில்லா விடில் விடுவிக்க வேண்டும் எனவும்தெரிவித்துள்ளது

## இருவர் கைது

அஸாம் விடுதலைமுன்னணியான உல்பா இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் இரு பத்திரிகை ஆசிரியர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்

பிரிவினை வாதிகளைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு பொலிசார் மிகக் கொடூரமாக நடந்து கொள்கின்றனர் என இவ் விரு பத்திரிகை ஆசிரியர்களும் கட்டுரைகள் எழுதினர் என பி. பி. ஸி, தெரிவித்தது

# யாழ். மாவட்ட கூட்டுறவுசபை சர்வதேச மகளிர் தின விழா

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழு நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று காலை ஒன்பது மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி திரு ஞானசோதி அருணம்பலம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் சிறப்பு விருந்தினராக திருமதி சரோஜா சிவச்சந்திரன் அவர்களும் (பணிப்பாளர் அபிவிருத்தி நிலையம்)கலந்து கொள்ளவுள்ளனர்.

கூட்டுறவு மகளிர் குழுக்களின் கலை நிகழ்ச்சிகளும் உள்ளூர் உற்பத்திப் பொருள் காட்சியும் இடம்பெறவுள்ளன,

கூட்டுறவு மகளிர் உரையை திருமதி யோகலிங்கம் வளர்மதி (தெ. ப. பொ: கூ. சங்க சமாச பிரதிநிதி திருமதி குலசிங்கம் (யாழ் மாவட்ட சி. க. வ. கூ. ச, சமாச பிரதிநிதி) திருமதி லலிதா மகேந்திரன்(ப நோ கூ சங்கங்களின் பிரதிநிதி) ஆகியோர் நிகழ்த்துவர்

"சமுதாயத்தில் பெண்களின் சுதந்திரத்திற்கு தடையாக இருப்பது ஆண்களா? பெண்களா?" என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறும்

### பெண்—

தையும் சௌரவத்தையும் மதித்து குடும்ப வாழ்வின் பொறுப்புகளைப் பகிர்ந்து சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக்கொண்டு வாழ்ந்தால் இந்தப் பால் வேறுபாட்டால் எழும் பல் வேறு முரண்பாடுகள் நீங்கும் இந்த அன்புறவின் ஆழமான அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் ஆணினம் புரிந்து கொளளும்பொழுது தான் ஆணாதிக்கமும் அதனால் எழும் அதிகார அடக்குமுறைகளும் அகன்று விட வாய்ப்புண்டு

உலகப்பெண்ணினத்தின் எழுச்சிநாளை முன்னிட்டு விடுதலை புலிகளின் மகளிர் முன்னணி இன்று நடத்தும் தமிழீழ பெண்கள் மாநாட்டிற்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

இரகசிய பொலிஸார்

# கைதான மாணவர்கள் ஜே.வி.பிக்கு ஆதரவு இல்லை

காரையில் ஜே. வி. பி இயக்க கூட்டம் நடத்தியதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பிக்குமார் உட்பட 16 பல்கலைக்கழக மாணவர்களில் எதுவித ஜே வி. பி தொடர்பான குற்றமும் இல்லை என இரகசிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்

ஆனால் பொலிஸார் இம் மாணவர்களை ஜே, வி பியுடன் தொடர்புடையவர்கள் எனத்தெரிவிக்கின்றனர்.

கைதாகி பரீட்சைக்காக விடுவிக்கப்பட்ட இரு மாணவர்களும் பரீட்சை முடிய உடனடியாக பொலிஸாரால் கைது செய்யப்படுவார்கள் எனவும் சிங்கள பி, பீ. ஸி தெரிவித்தது.

இவர்களில் இருவர் பல்கலைக்கழகத்தில் கற்று இடைந்து வெளியேறிய மாணவர்களாவர்,

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 08-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது